தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989 பிப்ரவரி 14, செவ்வாய்க்கிழமை.

மாசி 3, விபவ—திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"

தாம் கூறுகின்ற சொல்லை வெல்வதற்கு வேறொரு சொல் இல்லையென்பதை உறுதி செய்துகொண்டு அச்சொல்லைச் சொல்லுக.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(1) தகவல் கோரல்.

(அ) அமைச்சர்கள் மாறுவேடத்தில் சென்று குறைகளைக் கண்டறிதல்.

*திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு ஒரு பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன், இந்த அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சர்கள் குறிப்பாக, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், சென்னை நகர எம்.எல்.ஏக்களைக் கூப்பிட்டு உங்களுக்கு இருக்கிற குறைகள் என்னவென்று அவராகவே எங்களை அழைத்து, எங்கள் குறைகளைக் கேட்டு அந்தத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். "கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்" என்ற நிலைமை இல்லாமல், கேட்காமலேயே எங்களுக்கு இந்த நன்மையைச் செய்த அமைச்சர்களுக்கும், அமைச்சரவைக்கும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்

களும் திடீரென்று பரிசோதனைகளுக்குச் சென்று பல்வேறு விஷயங்களைக் கண்டுபிடித்துத் தக்க நடவடிக்கைகளை எடுத்து இருக்கின்றார்கள். இவர்கள் சுய உருவிலேயே செல்வதால் அதிகாரிகள் எச்சரிக்கையாகி அங்கேயுள்ள குறைகளை முன்னாலேயே தீர்த்து விடுகிறார்கள். எனவே இவர்கள் மாறுவேடத்திலே சென்று குறைகளைக் கண்டுபிடிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

* **திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாறுவேடத்திலே செல்வதைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. பெண் வேடம் போடாமல் இருக்க வேண்டுமென்று மட்டும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு பெண் என்றால் அவ்வளவு வெறுப்பு எதற்காக? (சிரிப்பு).

2. உரிமைப் பிரச்சினை.

மின்துறை அமைச்சர் மீது.

மின்கட்டணப் பாக்கியைச் செலுத்த சலுகை வழங்குதல் பற்றிய கொள்கை அறிவிப்பை அவைக்கு வெளியே தெரிவித்தது குறித்து.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஓர் உரிமை மீறல் பற்றிய பிரச்சினையை உங்களிடத்திலே கொடுத்து இருந்தேன். அந்தப் பிரச்சினை என்னவாயிற்று என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னவென்று சுருக்கமாக உரைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே இருக்கிற உறுப்பினர்கள் ஆறாம் தேதியன்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டு, உங்களுடைய விளக்கப்படி எட்டாம் தேதி பேரவைத் தலைவர் தேர்தல் நடைபெற்றதற்குப் பின்னால் 11 ஆம் தேதி ஆளுநர் அவர்களுடைய உரையோடு இந்தச் சட்டமன்றத் தொடர் துவங்கியதாகப் பொருள் ஆகிறது. சட்டமன்றத் தொடர் துவங்கியதற்குப் பின்னால் எந்தக் கொள்கை விளக்கப் பிரகடனமும்